சார்பு நீதிமன்றம் அரூர், தருமபுரி மாவட்டம்

முன்னிலை : **திரு.R.விஜயன்.,M.A.,B.L.,**

சார்பு நீதிபதி, அரூர்

2025 ம் ஆண்டு ஜுலை திங்கள் 19 ம் நாள் சனிக்கிழமை

**இ.நி.ம.எண்.02/2025**

**இன்**

**அசல் வழக்கு எண்.138/2018**

ஜெயா .... மனுதாரர் / வாதி

**// எதிராக //**

1. குமார்
2. துரை
3. கோவிந்தம்மாள் (இறப்பு)

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, என் முன்பாக 09.07.2025 ம் தேதியன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.செந்தில்குமார்.,(Enrl.No:786/2000) அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.காந்தி.,(Enrl.No:883/1980) அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையை கேட்டும், ஆவணங்களை பரிசீலினை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

1. அசல் வழக்கில் 3-ம் பிரதிவாதியின் பெயரில் இறப்பு என சேர்த்து திருத்தப்பாடு விவரத்தில் கண்டவாறு தாவாவில் திருத்தம் செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17 ன் கீழ் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்: -**

(i) நான் இம்மனுவில் மனுதாரர். வழக்கில் வாதி ஆவேன். நான் அசல் தாவாவை பிரதிவாதிகளுக்கு எதிராக ஏற்றதை ஆற்றுக பரிகாரத்திற்காக வேண்டி அல்லது

எங்களுக்கு மேற்படி ஒப்பந்த கிரையத்தொகையை வட்டியுடன் திருப்பித்தர தக்க உத்தரவு பிறப்பித்தும், கனம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தேன். மேற்படி நீதிமன்றத்தில் பிரதிவாதிகளுக்கு எதிராக ஏற்றதை ஆற்றுக பரிகாரத்திற்காக வேண்டி மேற்படி வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி வழக்கில் பதிலுரையும் தாக்கல் செய்துள்ளனர். எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மேற்படி வழக்கில் 3-ம் பிரதிவாதி கோவிந்தம்மாள் என்பவர் கடந்த 25.01.2025-ம் தேதியில் இறந்துவிட்டார். மேற்படி கனம் நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்துள்ளதால் திருத்தப்பாடு விவரத்தில் கண்டவாறு திருத்தம் செய்ய வேண்டி உள்ளது அவசியமாக உள்ளது. 3-ம் பிரதிவாதி பெயரில் இறப்பு என சேர்க்கவும்.

(ii) மேற்படி தாவாவில் 3-ம் பிரதிவாதி கோவிந்தம்மாள் என்பவருக்கு திருமணமாகி குழந்தைகள் எதுவும் இல்லை. மேற்படி 3ம் பிரதிவாதி கோவிந்தம்மாள் என்பவரின் கணவர் வெள்ளைய கவுண்டரும் இறந்துவிட்டார். மேற்படி 3-ம் பிரதிவாதி கோவிந்தம்மாள் என்பவரது பெயரை தாவாவில் இறப்பு என சேர்க்க வேண்டி அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி வழக்கில் தவறி குறிப்பிடப்பட்டுள்ள 3 ம் பிரதிவாதியின் பெயரை இறப்பு என சேர்த்து திருத்தப்பாடு விவரத்தில் கண்டவாறு தாவாவில் திருத்தம் செய்ய இம்மனுவை அனுமதித்து உத்தர வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது.

3. <u>2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>: -

(i) மனுதாரரின் மனு பொய், மோசம், சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடியாக வேண்டியது. இந்த எதிர்மனுதாரர் தான் இங்கு யுக்தமாய் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனு அபிடவிட்டில் கண்ட

சங்கதிகள் சரியல்ல. தாவாவில் 3-ம் பிரதிவாதியான கோவிந்தம்மாள் என்பவரும் வாதியும் ஒரே கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றும், மேற்படி கோவிந்தம்மாள் என்பவர் கடந்த 25.01.2025 தேதியில் இறந்த சங்கதி வாதிக்கு அன்றைய தினமே தெரியும். ஆனால் மேற்படி தாவாவில் வாதி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் வீண் காலங்கடத்தி வந்து இந்த பிரதிவாதி தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்த பிறகு தாவாவை திருத்தப்பாடு செய்ய கோரியிருப்பதிலிருந்தே வாதி தாவாவை நடத்த முன்வரவில்லை என்றும் காலங்கடத்தி வருகிறார் என்பதையும் நன்கு அறியமுடியும்.

(ii) தாவாவில் வாதிக்கு வெற்றி வாய்ப்பு சிறிதும் இல்லை என்ற காரணத்தினால் வேண்டுமென்றே பிரதிவாதிகளை இழுத்தடிக்க வேண்டுமென்ற தீய எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். இம்மனு அனுமதிக்கப்பட்டால் இவ்வெதிர்மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும். எனவே, கனம் கோர்ட்டார் அவர்கள் கிருபை செய்து மனுதாரரின் மனுவை இவ்வெதிர்மனுதாரரின் அதிகபட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமாய் வணக்கமுடன் வேண்டுகிறார்.

**4. இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

**<u>தீர்வு</u>** : -

**5.** இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலினை செய்யப்பட்டது. அசல் வழக்கில் 3-ம் பிரதிவாதியின் பெயரில் இறப்பு என சேர்த்து திருத்தப்பாடு விவரத்தில் கண்டவாறு தாவாவில் திருத்தம் செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17ன் கீழ் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**6.** மனுதாரர்/வாதி தான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் அசல் வழக்கில்

மேற்படி வழக்கில் 3-ம் பிரதிவாதி கோவிந்தம்மாள் என்பவர் கடந்த 25.01.2025-ம் தேதியில் இறந்துவிட்டதாகவும், மேற்படி கனம் நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்துள்ளதால் திருத்தப்பாடு விவரத்தில் கண்டவாறு திருத்தம் செய்ய வேண்டி உள்ளது அவசியமாக உள்ளது என்றும், 3-ம் பிரதிவாதி பெயரில் இறப்பு என சேர்க்கவும் மேற்படி தாவாவில் 3-ம் பிரதிவாதி கோவிந்தம்மாள் என்பவருக்கு திருமணமாகி குழந்தைகள் எதுவும் இல்லை என்றும், மேற்படி 3 ம் பிரதிவாதி கோவிந்தம்மாள் என்பவரின் கணவர் வெள்ளைய கவுண்டரும் இறந்துவிட்டார் என்றும், எனவே 3-ம் பிரதிவாதி கோவிந்தம்மாள் என்பவரது பெயரை தாவாவில் இறப்பு என திருத்தம் செய்ய அனுமதிக்கக்கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

**7.** மேலும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள பதிலுரையில், தாவாவில் 3-ம் பிரதிவாதியான கோவிந்தம்மாள் என்பவரும் வாதியும் ஒரே கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றும், மேற்படி கோவிந்தம்மாள் என்பவர் கடந்த 25.01.2025 தேதியில் இறந்த சங்கதி வாதிக்கு அன்றைய தினமே தெரியும் என்றும், ஆனால் மேற்படி தாவாவில் வாதி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் வீண் காலங்கடத்தி வந்து இந்த பிரதிவாதி தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்த பிறகு தாவாவை திருத்தப்பாடு செய்ய கோரியிருப்பதிலிருந்தே வாதி தாவாவை நடத்த முன்வரவில்லை என்றும், காலங்கடத்தி வருகிறார் என்பதையும் நன்கு அறியமுடியும் என்றும், தாவாவில் வாதிக்கு வெற்றி வாய்ப்பு சிறிதும் இல்லை என்ற காரணத்தினால் வேண்டுமென்றே பிரதிவாதிகளை இழுத்தடிக்க வேண்டுமென்ற தீய எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்று ஆட்சேபித்துள்ளார்.

**8.** மேற்படி மனுவில் கோரப்பட்டுள்ளவாறு தாவாவை திருத்தப்பாடு செய்வதால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித இழப்பும் ஏற்படபோவதில்லை என்பதை

கருத்தில் கொண்டும், மேலும், தாவாவில் கோரும் திருத்தப்பாடுகள் வழக்கின் தன்மையையோ, அல்லது வழக்கில் கோரிய பரிகாரத்தைப் பொறுத்தோ எவ்வித மாறுதலையும் ஏற்படுத்தக் கூடியதாக இல்லை என்பதாலும், மனுதாரர்/வாதி திருத்தப்பாடு மனுவில் கோரப்பட்டுள்ள படி, அசல் வழக்கில் 3-ம் பிரதிவாதியின் பெயரில் இறப்பு என சேர்த்து திருத்தப்பாடு விவரத்தில் கண்டவாறு தாவாவில் திருத்தம் செய்வதற்கு அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகின்றது.

9. **இறுதியாக**, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2025 ம் ஆண்டு ஜுலை திங்கள் 19 ம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2025.07.19 17:41:23 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.

<u>**இரு தரப்பு சாட்சிய சான்றாவணங்கள்**</u> : -

-- இல்லை -

R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2025.07.19 17:41:29 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.